உள்ளே செல்லமுடியாத நிலை ஏற்படுகிறது. அப்படிக் கட்டப்படுகின்ற கரையில் சலவையாளர்கள் ஆற்றிலே இறங்கி துணி துவைக்கின்ற அளவுக்கு படி வசதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பற்றி அதிகாரிகளோடு கலந்துகொண்டு சாத்தியக்கூறுகள் அறிந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

Thiru T. Venkata Reddy: Hon'ble Deputy Speaker Sir, on behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee :

(1) Fifty-fourty Report of the Committee on Public Accounts on the paragraphs pertaining to Revenue Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1982-83. (Revenue Receipts)

(2) fif y-fifty Report of the Committee on Public Account on the paragraphs pertaining to Home Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1982-83. (Revenue Receipts).

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொதுப் பணித்துறை குறித்த பத்திகள் மீதான மேற்படி குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83ஆம் மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) மின்னணுவியல், அறிவியல்-தொழில் நுட்பவியல் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை.